IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.79/2023

Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | வாசு | Caste | : | |
| Father Name | : | ஆறுமுகம் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் நான் சொல்லப்பட்டு தயார் பன்னபட்டவையா அல்லது வழக்கறிஞர் சொல்லி தயார் செய்யபட்டதா என்றால் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. பாகப்பிரிவினை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் ஒரு அட்டவணை சொத்தை வைத்து தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட ஜக்பந்தி, சர்வே எண் போன்ற விவரங்கள எனக்கு தெரியும். சர்வே எண்.166/C1 ஆகும். விஸ்திரனம் 1600 சதுர அடி ஆகும். ஆரம்பத்தில் தாவா சொத்து எனது அம்மா பெயரில் இருந்தது. என் அம்மா கோவிந்தசாமி என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கிய சொத்தாகும்.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து மூதாதையர் சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் என் தாத்தா, பாட்டி சொத்து எனது பெயரியப்பா பெயரில் இருந்தது அதை எனது அம்மா கிரையம் பெற்றார். என் அம்மா எப்போது கிரையம் பெற்றார் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. தற்போது எனக்கு 70 வயது ஆகிறது. 1976 ல் என் அம்மாவால் தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்கள் கிரையம் பெறப்பட்டவை என்றால் சரிதான். 48 சென்டிற்கு மேல் என் அ ம்மாவால் கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

3. தாவா சொத்திலும் மற்ற சில சொத்துகளில் ஒரு பகுதியை இந்த வழக்கில் 2, 3, 4 பிரதிவாதிகள் மற்றும் 1ஆம் பிரதிவாதி காசிநாதனின் மற்ற இரண்டு மகன்கள் பெயரிலும் உயில் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. 4ஆம் பிரதிவாதி மீது மட்டும் தான் உயில் எழுதி வைக்கப்பட்டது. உயிலானது 10.07.2008 ஆம் ஆண்டு எழுதப்பட்டது என்று சொன்னால் சரிதான். உயிலானது 2,3,4 பிரதிவாதிகளுக்கும் காசிநாதனின் மற்ற இரண்டு மகன்களுக்கும் மொத்தமாக 5 அட்டவணையாக பிரிக்கப்பட்டு உயில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அட்டவணை E ல் உள்ள சொத்தானது 4ஆம் பிரதிவாதியான தமிழரசன் மீது 1600 சதுர அடி சொத்து உயில் எழுதி வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆனால் அது யாருக்கும் தெரியாது. மேற்படி உயிலானது பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி யாருக்கும் தெரியாது.

4. எனது தாயார் மேற்படி E அட்டவணையில் உள்ள சொத்துக்களை தவிர மற்ற அனைத்து சொத்துகளையும் விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். A, B, C, D ஆகிய அட்டவணை சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். E அட்டவணையில் உள்ள சொத்தை உயில் எழுதி வைக்கும் போது 4ஆம் பிரதிவாதி இளவராக இருந்ததால் அவரது தாயார் அமுதாவை Guardian ஆக நியமிக்கப்பட்டு எழுதிவைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 4ஆம் பிரதிவாதி மேஜராக இருந்தார். 2015 ல் கிருஷ்ணவேனி அம்மாள் அதாவது எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2015 வரை அதாவது கிருஷ்ணவேனி இறக்கும் வரை E அட்டவணையில் உள்ள சொத்தை இரத்து செய்யவில்லை என்று சொன்னால் பதிவு செய்யப்பட்ட விவரமே எனக்கு தெரியாது.

5. மேற்டி கிருஷ்ணவேனி அம்மாள் மற்ற A,B,C,D ஆகிய சொத்துக்களின் உயில் விவரம் எழுதிவைக்கப்பட்டுளள நபர்கள் மேஜராக இருந்ததால் விற்பனை செய்யப்பட்டுவிட்டது என்றும் 4 ஆம் பிரதிவாதி இளவராக இருந்ததால் E சொத்தானது விற்பனை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 4 ஆம் பிரதிவாதி இளவராக இருந்து மேஜராக மாறிய போது அவர் மீது வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. E அட்டவணை சொத்துக்கு நான் சொன்ன சர்வே எண்ணனான 166/C1 ஆனது தவறுதலாக சொல்லிவிட்டேன் தற்போது 166/1c என்று கூறப்படுகிறது. மேற்படி அட்டவணை சொத்தானது வருவாய் ஆவணங்கள் மாற்றப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.166/1C1B மாற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புதிய ஆவணங்களை தாக்கல் செய்யாமல் பழை ஆவணங்களை தாக்கல் செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தமிழரசனின் சொத்தை தான் நான் தாவா சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னாலும் அதிலும் சர்வே எண்ணை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. கிருஷ்ணவேனி அம்மாள் இறந்தவுடன் உயில் நடைமுறைக்கு வந்துவிடும் என்று சொன்னாலும் அதனால் இன்றைய தேதிப்படி 4 ஆம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று சொன்னால் சரியல்ல. தமிழரசன் சொத்தை அவர் யாருக்கு வேண்டுமானாலும் விற்பனை செய்யலாம் என்றால் சரியல்ல. 4 ஆம் பிரதிவாதி தவிர அந்த சொத்து வேறு யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதை என் அம்மா கூட்டு குடும்பத்தில் இருந்து வந்த வருமான்தை வாங்கி அவ்வாறு செய்துள்ளார் அதனால் அவர் உரிமையாளர் அல்ல. நான் கொடுத்த அறிவிப்பிற்கு 1 மற்றும் 4 பிரதிவாதியால் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்ட

போது மேற்கண்ட விவரங்கள் அனைத்தையும் சொல்லியும் நான் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.   2015 ற்கு பிறகு அதாவது கிருஷ்ணவேனி அம்மாள்  இறந்த பிறகு தற்போது வரை 4 ஆம் பிரதிவாதி மற்றும் தான் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும் மற்றவர்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

7. நான் பாகப்பிரிவினை  கோரவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.  நான் நீதிமன்ற கட்டணத்தை கூட்டு சுவாதீமனம் உள்ளதாக செலுத்தியுள்ளது சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல.  மற்ற சொத்துக்கள் மீது வழக்கு தாக்கல் செய்யாமல் தமிழரசன் மீது உள்ள சொத்துக்களுக்கு மட்டும் வழக்கை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தவறாக தாக்கல் செய்துள்ளதால் மேற்படி 1 மற்றும் 4 ஆம் பிரதிவாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.   வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI